1982 மார்ச் 8]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அந்த ஊழியர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் என்பதைப் பற்றி அரசு பரிசிலனை செய்யவில்லை. அவர் கூறிய மற்றப் பிரச்னைகளைப் பொறுத்தவரையில் நான் சொல்ல விரும்புவது, எதையும் ஜெனரலைஸ் செய்யாமல், செங்கற்பட்டு தொகுதியில் இன்னின்ன இடத்தில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், அதற்குத் தக்க நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முத்தையாபுரம், இராமச்சந்திராபுரம் கிராமங்களுக்கான குடிநீர் திட்டம்.

* வினா எண் 415—திரு. ஆர். கே. பெருமாள் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முத்தையாபுரம், இராமச்சந்திராபுரம் கிராமத்திற்கு விளாத்தி குளம் ஆற்றில் இருந்து குடிதண்ணீர் கொண்டு வரும் நோக்கம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீடு ?

(இ) எப்போது வேலை ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ), (ஆ) மற்றும் (இ) இராமச்சந்திராபுரம் உள்ளடங்கிய பனையடிப்பட்டி மற்றும் நான்கு சிற்றூர் களுக்கான கூட்டு குடிநீர் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 9.35 லட்சம் ஆகும். தற்போது திட்டத்தின் அனைத்துப் பணிகளும் முடிவடைந்து சோதனை ஓட்ட அடிப்படையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. புதூர் ஒன்றியத்தைச் சார்ந்த முத்தையாபுரம் சிற்றூர் பிரிவு 6 (நல்ல குடிநீர் நிலைகள் உள்ளது)-ல் வருவதால், இச்சிற்றூருக்கான குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், மாநிலத்திலுள்ள பிரிவு 6-ல் அடங்கியுள்ள அனைத்து சிற்றூர்களில் திட்டங்கள் மேற்கொள்ளப் படும்போது, பரிசீலிக்கப்படும்.

திருச்சி, மதுரை மாவட்டக் காடுகளில் கிடைக்கும் விலையுயர்ந்த பச்சைக் கற்கள்.

* வினா எண் 416—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், வெள்ளியணை, மதுரை மாவட்டம் வேடசந்தூர், பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள காடுகளில் விலையுயர்ந்த பச்சைக்கற்கள் கிடைப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அத்தகைய கற்களை தனியார் எடுத்து விற்பதை தடை செய்து அரசே எடுத்து நடத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) தெரியும்.

(ஆ) தொழில்துறையின் புவியியல் பிரிவு இதைப்பற்றி ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளது. அரசே இவ்வகை கற்களை வெட்டி எடுப்பது மேற்படி ஆராய்ச்சியின் முடிவைப் பொருத்து இருக்கிறது.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கற்களை பூமியில் இருந்து எடுப்பவர்கள் சில அப்பாவிகள். அவர்கள் எடுக்கும் கற்களை சிலர் குறைந்த விலைக்கு வாங்கி, அதிக விலைக்கு விற்று, நிறைய லாபம் பெறுகிறார்கள். அரசு இதைத் தடை செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இந்த அரசின் அனுமதி பெற்று யாரும் அங்கே அந்தக் கற்களை தோண்டி எடுக்க வில்லை. திருட்டுத்தனமாக, யாருக்கும் தெரியாமல் அந்தப் பகுதியில் தவறு செய்கிறவர்கள் மீது வருவாய்த் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். சிலர் மீது வழக்கும் போடப்பட்டு இருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இத்தகைய விலையுர்ந்த கற்கள் வேடசந்தூர், அய்யலூர், செம்மலை, ஒட்டன்சத்திரம், கரூர் பகுதிகளில் ஏராளமாகக் கிடைக்கின்றன. இப்படி ஏராளமாகக் கிடைக்கும் கற்களைப் பற்றி விரிவான ஆய்வு செய்து, தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் எற்கனவே சொன்னதைப்போல, பரவலாக அந்தப் பகுதியில் அந்தக் கற்கள் கிடைக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், தொழில்துறை புவியியல் பிரிவு அந்தக் கற்களைக் குறித்து ஆய்வு மேற்கொண்டு, அந்த ஆபரணக் கற்களை பொருளாதார ரீதியில் லாபகரமாக நடத்தமுடியுமா என்பதற்கான ஆய்வு மேற்கொண்டு இருக்கிறது. ஆகவே, இது குறித்து பின்னர் முடிவு எடுக்கப் படும்.

திரு. பி. எம். தங்கவேல் ராஜ் : தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி கீரனூரில் பச்சைக் கற்கள், சிவப்புக் கற்கள் அந்தப் பகுதியில் தோண்டி எடுக்கப்பட்டது என்று தெரிந்தவுடன், ஆர்.டி.ஓ. அவர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டு, அந்த ஆர்.டி.ஓ. அவர்கள் அதைக் கைப்பற்றி,

1982 மார்ச் 8]

கிட்டத்தட்ட 25 மூட்டைகள் கைப்பற்றப்பட்டு, பாதுகாப்பில் வைக்கப்பட்டன. சென்ற ஆண்டு இந்த கேள்வி கேட்கப்பட்டது. மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் அளிக்கின்ற நோத்தில் அங்கே தொழிற்சாலை அமைப்பது ஆய்வில் உள்ளது என்று சொன்னார்கள். இந்த ஆண்டாவது அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நான் எற்கனவே சொன்னேன். மாநில புவியியல் பிரிவு இது சம்பந்தமாக ஆய்வு மேற்கொண்டுள்ளது. அதனுடைய முடிவு தெரிந்ததற்குப் பின்னாலே இதுகுறித்து முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

குமரி மாவட்டத்தில் கிடைக்கும் இரத்தினக்கற்கள்.

*** வினா எண் 417.—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் ஒருவிதமான இரத்தினக் கற்கள் கிடைப்பதாக அரசுக்கு அறிக்கைகள் கிடைத்துள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம் மற்றும் தோவலா வட்டங்களில் கிரைசோபெரில் எனப்படும் ஒருவகை மணிக்கல் (வைடூரியம்) கிடைப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவைகள் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் அமைந்தில்லாமல், சிதறிய நிலையில் அமைந்துள்ளன. இவை பிற கனிமங்களைப் போல வடிவமும் ஆழ அமைப்பும் இல்லாததால் இவற்றின் இருப்பு அளவை கணக்கிட இயலவில்லை.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வைரம் விளையும் மாவட்டம் குமரி மாவட்டம். தமிழ் தாய்க்கு வைரக் கற்களை தானம் செய்யும் குமரிக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் செயற்கை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS